**வெலிமட பிரதேச சபை**

**பதுளை மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்டம்பர் 06 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெலிமட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த 05 மோட்டார் வாகனங்களின் பெறுமதியாகிய ரூபா 16,985,047 தொகையினைக் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளின் போது சபைக்குக் கிடைத்திருந்த 69 கல்வணய்ஸ் கொடிக் கம்பங்களின் பெறுமதியாகிய ரூபா 68,208 தொகையினால் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 16,055 தொகைக்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 1,700,113 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டு தொடர்பாக நடைமுறை ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 589,200 தொகை பெறுமதியான 12 செலவுகளை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 186,562 பெறுமதியான 25 செலவு விடயங்கள் தொடர்பாக கடன்கொடுத்தோர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 360,740 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 39,400 மற்றும் நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 7,699,827 தொகையினை மீளாய்வாண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்திருந்தது.

(ஐ) மலசல வடிகால் செயற்திட்டத்தின் கீழ் பெற்றிருந்த கணனியின் பெறுமதியாகிய ரூபா 77,500 தொகையினைக் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் மீதி வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் காசு மீதி என்பன ரூபா 33,001 தொகையினால் இணங்கியிருக்கவில்லை.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 44,618,773 தொகையாகக் காணப்பட்டதுடன், அத் தினத்தில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 58,407,907 ஆக இருந்தது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------------

ரூபா 2,489,220 பெறுமதியான 04 கணக்கு விடயங்கள், மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதியின் 218 ஆம் பிரிவு | ஒரு வருடத்திற்கு ஒரு முறை காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீது கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 371 | 32 சந்தர்ப்பங்களில் பல்வேறு சாராருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,319,133 தொகைக்கான முற்பணங்களைத் தீர்த்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நி.பி. 571 | கூட்டுத்தொகை ரூபா 2,182,737 இற்கான 43 காலங்கடந்த வைப்புக்களை ஆதனவளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் 4 ஆம் பிரிவு | சேவையை விட்டுச் சென்றுள்ள மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள இரண்டு அலுவலர்களிடம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 220,454 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 14 கணனிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைக் கருவிகள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2012 ஜூலை 03 திகதிய SEC-2012/03 இலக்க சுற்றிக்கை | சரியான முறையில் பெறுமதி கூட்டிய வரி (VAT) கொடுப்பனவுகளை கணிக்கப்படாமையால் 2015 அக்டோபர் முதல் திசெம்பர் வரையான மாதங்களின் போது ரூபா 128,823 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. |

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,651,504 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 26,007,502 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

----------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

-----------------------------------------------------------------

முன்னைய ஆண்டுகள் தொடர்பாக மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைந்த நிலையில் காணப்பட்டது.

2.2.2 வாடகை

-----------------

(அ) 23 கடைகள் தொடர்பாக 6 மாதங்கள் - 166 மாதங்கள் இடைப்பட்ட காலம் நிலுவையாகக் காணப்பட்ட கடை வாடகை ரூபா 1,171,199 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2011 ஆண்டு தொடர்பாக 2015 திசெம்பர் 31 வரை நிலுவையாகக் காணப்பட்ட கேள்வி கடை வாடகை ரூபா 1,741,909 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 11,895,445 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,335,300 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை காலப் பகுதியில் மீளளிப்புச் செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 1,700,352 தொகைக்கான சம்பளம் மற்றும் ரூபா 156,500 தொகையான மந்திரிமார் படி என்பவற்றை மீளளிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபைகளில் வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சனசமூக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக வழங்கியிருந்த ரூபா 1,000,000 தொகையொன்று குறிப்பிட்ட நிர்மாண வேலை ஆரம்பிக்கப்படாமையால் 2016 மார்ச் 28 திகதி மீண்டும் அனுப்பப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மீளாய்வாண்டின் போது பாதீடு வருமானங்கள் மற்றும் செலவுகள் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தியிருக்கவில்லை.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

----------------------------------------------------

நடைமுறையாண்டின் போது வருடாந்த பெறுகைகள் திட்டம் செயற்படுத்தியிருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------

2015 ஆண்டிற்கான போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழு செயற்படுத்தல்

------------------------------------------------------------------------------------------

நடைமுறை ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழு செயற்பட்டிருக்கவில்லை.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

விளைவற்ற சொத்துக்கள்

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் 1993 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 138,650 தொகைக்கான முச்சக்கர வண்டி விளைவற்று காணப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான கெப்பெட்டிப்பொல உப அலுவலகத்தில் 02 கைடிரக்டர்கள், நீர் பவுசர் ஒன்று, டிரக்டர் ஒன்று, தீ அணைக்கும் வண்டி ஒன்று, டிரக்டர் டெய்லர் மற்றும் கலப்பு ஒன்று என்பன நீண்ட காலமாக விளைவற்று காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டு ஜனவரி முதல் திசெம்பர் வரை சபைக்குச் சொந்தமான உப அலுவலகங்களில் நாளாந்தம் சேகரிக்கப்படும் ரூபா 85,740,281 தொகை மாதாந்தம் பிரதான கணக்கிற்கு மாற்றப்படாமல் விளைவற்று ஆண்டு பூராகவும் வைப்புச் செய்யப்பட்டு வைப்பதன் காரணமாக வருமானத்தை முதலீடு செய்வதன் மூலம் உழைக்கக் கூடியதாக இருந்த வட்டி வருமானத்தை சபை இழந்திருந்தது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்